**ஐ.டி.எண். 4/2024** **07.11.2025**

**தொ.த.சாட்சி 1 முகமது இப்ராகிம் குறுக்கு விசாரணை**

மனு மற்றும் நிருபண வாக்குமூலத்தில் கூறியுள்ள விவரங்களை நான் தான் எனது சான்றளிக்கப்பட்ட பிரதிநிதியிடம் கூறினேன். நிர்வாகம் 2020-ம் ஆண்டு முதல் சம்பளம் உரிய காலத்தில் வழங்காதது குறித்து தொழிலாளர் அலுவலரிடம் நான் புகார் எதுவும் அளிக்கவில்லை. எனக்கு வங்கி கணக்கு எஸ்.பி.ஐ ஆம்பூர் கிளையில் உள்ளது அதனுடைய எண்.10948094023 ஆகும். ஜனவரி 2020 முதல் மார்ச் 2020 வரையிலான மாத சம்பளம் என்னுடைய வங்கி கணக்கில் நிர்வாகம் செலுத்திவிட்டது என்றால் சரிதான். லாக்டவுன் காலக்கட்டத்தில் நிர்வாகம் அழைக்கும்பட்சத்தில் வேலைக்கு சென்று கொடுத்த வேலையை முடித்து கொடுத்தேன். மே மாதம் மற்றும் ஜீன் மாதத்திற்கான சம்பளம் ஜீலை மாதத்தில் வங்கியில் செலுத்தப்பட்டது என்றால் சரிதான். ஜீலை 2020 முதல் எந்தவித காரணமும் இல்லாமல் நான் பணிக்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. வேலைக் கொடுக்காததால் நிர்வாத்திடம் வேலை கேட்டு பல தொழிலாளர் வந்தார்கள் என்றால் சரியல்ல. சில தொழிலாளர்கள் சம்பளம் கோரி வழக்கு தொடர்ந்தார்கள் என்று மனுவில் நான் கூறியுள்ளேன் என்றால் நான் அவ்வாறு எதுவும் கூறவில்லை. நிர்வாகத்திடம் நான் சென்று சம்பளம் கேட்டதால் அவர்கள் ஆத்திரம் அடைந்து என்னிடம் செட்டில்மெண்ட் வாங்கிக்கொண்டு செல்லுங்கள் என்று கூறியதாக நான் கூறுவது தவறு என்றால் சரியல்ல. 06.01.2022 முதல் என்னை வேலையை விட்டு வாய்மொழியாக நீக்கிவிட்டு சட்டவிரோதமாக பணிநீக்கம் செய்தார்கள் என்று நான் கூறுவது தவறு என்றால் சரியல்ல. நான் பலமுறை சென்று வேலை கேட்டும் நிர்வாகம் வேலைக்கொடுக்காமல் கடிதம் அனுப்புகிறேன் என்று கூறியதாக நான் கூறுவதும் தவறு என்றால் சரியல்ல. 26.04.2023 அன்று நான் நேரடியாக நிர்வாகத்திடம் இருந்து எனது குடும்ப சூழ்நிலையை கருத்தில் கொண்டு எனக்கு வேலை வழங்கும்படி நான் கேட்டேன் என்றால் சரியல்ல. அதனை கருத்தில் கொண்டு நிர்வாகம் ஒரு வாரம் கழித்து வேலைக்கு வரும்படி எனக்கு கடிதம் அனுப்பியும் நான் வேலைக்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. நானாகதான் வேலை விட்டு நின்றுவிட்டேன் என்றால் சரியல்ல. நான் வேலை எங்கும்

செய்யவில்லை. நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

S UMAMAHESWARI

Digitally signed by S UMAMAHESWARI
Date: 2025.11.07 16:40:12 +0530